# யோசுவா

சரித்திரப் புத்தகங்கள்.

1. **யோசுவா.**
2. **நியாயாதிபதிகள்.**
3. **ரூத்**
4. **1ம், சாமுவேல்,**
5. **2ம், சாமுவேல்,**
6. **1ம், இராஜாக்கள்,**
7. **2ம், இராஜாக்கள்**
8. **1ம், நாளாகமம்**
9. **2ம், நாளாகமம்**
10. **எஸ்றா,**
11. **நெகேமியா,**
12. **எஸ்தர்.**

**யோசுவா**:- வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்தலும், அங்கு குடியமர்தலும்.

**நியாயாதிபதிகள்**:- தொடர்ச்சியாக நியாயாதிபதிகளினால் அல்லது இராணுவத் தலைவர்களினால் இஸ்ரவேல் பாதுகாக்கப்படல். மூன்று சிறப்பான விடுதலை வீரர்கள் தெபோராள், கிதியோன், சிம்சோன்.

**ரூத்**:- கர்த்தருடைய அன்பையும், கவனிப்பையும் விளக்கும் ஒரு அழகான கதை.

**1ம், 2ம், சாமுவேல்**:- இஸ்ரவேலர்களின் ஆரம்ப சரித்திரம், தாவீதினுடையதும், சவுலுடையதும் ஆட்சிக்காலங்கள்.

**1ம், 2ம், ராஜாக்கள்:-** இஸ்ரவேலின் அரசியல் சரித்திரம், ராஜாக்களின் ஆட்சியைப்பற்றிக் கூறுகின்றது, சாலொமோனின் ஆட்சி தொடக்கம், யூதர்கள் பாபிலோனியர்களால் சிறைப்பிடிக்கும் வரையிலான சரித்திரம்.

**1ம், 2ம், நாளாகமம்:-** இஸ்ரவேலின் மதசார்பான சரித்திரம், 2ம் சாமுவேல், 1ம், 2ம், இராஜாக்களின் காலங்களை உள்ளடக்கிய சரித்திரம்

**எஸ்றா**:- பாபிலோனிலிருந்து யூதமக்கள் சிறையிருப்பிலிருந்து மீண்டு எருசலேமிற்கு வருதல்.

**நெகேமியா**:- யூத சிறையிருப்பாளர்கள் எருசலேமிற்கு வந்த பிற்பாடு, அதன் அலங்கம் மீளக்கட்டப்படல்.

**எஸ்தர்:-** புறஜாதிகளின் ஆட்சிக்காலத்தில், கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளைப் பாதுகாத்தல்.

## யோசுவா

| |
|---|
| யோசுவா கானானுக்குள் நுழைதல்- 1406. கி.மு |
| யோசுவா கானானை வெற்றி கொள்ளல் நிறைவு– 1300 கி.மு |
| இஸ்ரவேலின் ஆளுகை 1ம் நியாயாதிபதி -ஒத்னியேல்- 1377 கி.மு |

பின்னணி;- 400 வருடங்கள் எகிப்தில் அடிமையாகவும், 40 வருடங்கள் பாலைவனத்தில் அலைந்துதிரிந்த இஸ்ரவேலர்கள் இறுதியில் ஆபிரகாம் காலத்தில் வாக்களிக்கப்பட்ட தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு ஆயத்தமானார்கள். யோசுவா, காதேஸ் பார்னேயில் புரட்சியில் விசுவாசமாக இருந்த ஒருவர் (எண்.13-14), கானானுக்குள் அவர்களைத் தெரிவு செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டார். (எண்.27:15-23). கானான் தேசத்தை வெற்றி கொண்டதில் யோசுவாவின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. (1-12), கோத்திரங்கள் மத்தியில் தேசம் பங்கிடப்பட்டதும், (13-21), அத்துடன் அவரது இறுதி அறிவுரையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (22-24)

**எழுதியவர்:-** புத்தகத்தின் பெரும்பகுதிகள் யோசுவாவால் தான் எழுதப் பட்டுள்ளது,

**காலமும் இடமும்**:- யோசுவா 1390 இல் மரணமடைந்துள்ளார். (24:29), கானான் வெற்றி கொள்ளப்பட்டபின் 15 வருடங்களுக்குப் பின்பாக. அனேக சம்பவங்கள் யோசுவாவால் எழுதப்பட்டதாக ஏற்றுக் கொள்ளுகிறார்கள். யோசுவாவின் சொந்த ஊரான திம்னாத்-சேரத்திலேயே இது எழுதப்பட்டுள்ளது. ஆவிக்குரிய நிலையமாகிய சீகேமிலே அனேகம் ஆசாரியர்கள் காணப்பட்டார்கள் (24:1) அல்லது பெத்தேல், அங்கே தான் உடன்படிக்கைப் பெட்டி இருந்தது. (நியா 20:26-27).

**நோக்கம்** :- கர்த்தர் தன்னுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்று யோசுவா போதித்துவந்தார். கானான் தேசத்தைத் தருவேன் என்ற வாக்குறிதியும் இங்கு அடங்குகிறது. விஷேடமான வாக்குறுதிகள் குறிப்பிட்ட யுத்த வெற்றிகளாகும். (6:2; 10:8). கர்த்தரின் வாக்குறுதிகள் ஒருநாளும் தோற்றுப் போவதில்லை(21:45). இஸ்ரவேலர்கள் கீழ்ப்படிந்து விசுவாசத்தில் கால்பதிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.

**விஷேடநிகழ்வுகள்.**

• மூன்று முக்கிய அற்புதங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (3:14-17; 6; 10).

• கர்த்தரின் திட்டத்தில் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப் பிடிப்பதில் புறஜாதிகள் விலக்களிக்கப்படவில்லை என்பதை யோசுவா புத்தகம் வெளிப்படுத்துகின்றது. கானானிய வேசியாகிய ராகாப் இஸ்ரவேலர்களைத் தொடர்ந்து கொண்டாள் என்பதை புதிய ஏற்பாட்டிலிலுள்ள மூன்று பகுதிகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

• மத்தேயு 1;5 இயேசுவின் பரம்பரையில் ராகாப்பின் நிலை. எபிரேயர் 11;31 இல் அவளுடைய விசுவாசம், யாக்கோபு 2;25 இல் அவளுடைய நற்செயல் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளன.

• யோசுவா புத்தகத்தில் கிறிஸ்த்துவின் முன் அவதாரம், அல்லது தோற்றம் பதிவு செய்யப்பட்டுள்ளது–கர்த்தருடைய சேனையின் தலைவராக

(5:13-15). பழைய ஏற்பாட்டில் சரீரப்பிரகாரமான தோற்றங்கள் பல தடவைகள் இடம் பெற்றுள்ளன.(ஆதி 16:1-16; சக.1:7-11;ஆதி.17:1-8).

**யாத்திரகாமப் புத்தகத்துடனான ஒப்பீடு;-** எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து எப்படி கர்த்தர் இஸ்ரவேலர்களை மீட்டுக் கொண்டுவந்தார் என்பது கூறப்பட்டுள்ளது, அதே நேரம் தன்னுடைய மக்களை எப்படி ஆசீர்வாதமான தேசத்திற்குள் கூட்டிச் சென்றார் என்று யோசுவா புத்தகம் கூறுகின்றது. (உபா6:23). யாத்திரகாமத்தில் வெளியேற்றமும், யோசுவாவில் உள் நுழைதலும் தண்ணீரைப் பிளந்தே நிறைவேற்றப்பட்டன. அதாவது யாத்திரகாமத்தில் செங்கடலும், யோசுவாவில் யோர்தானும் பிரிக்கப்பட்டன. எகிப்திலிருந்து வெளியேறும் போது ஆவிக்குரிய மரணத்தில் இஸ்ரவேலர்கள் காணப் பட்டார்கள் அதே நேரம் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையும்போது இரட்சிப்பின் அனுபவத்துடன் உள்நுழைந்தார்கள்.

**சுருக்கம்**

**(1)கைப்பற்றுதல்**

1. இஸ்ரவேலர்கள் கானானை உரிமை கொள்ளல். (1:1-5:12)
2. யோசுவாவுக்கான கர்த்தரின் செய்தி.(1:1-9)
3. மக்களுக்கான யோசுவாவின் செய்தி. (1:10-18)
4. வேவுகாரர் எரிகோவுக்கு அனுப்பிவைக்கப்படலும், அவர்கள் ராகாப்பினால் ஒளித்துவைக்கப்படலும்.

(2) **ஜோர்தானைக் கடத்தல் (3:1-4:18)**

- கில்காலில் முகாம் அமைத்தல். (4:19-5:12)
- ஆளுகைசெய்தல்.
- இஸ்ரவேலர்கள் கானானை வெற்றி கொள்ளல். (5:13-12:24)
- கர்த்தருடைய சேனைத்தலைவர்.(5:13-15)

**(3)போராட்டம்.(6:1-8:29)**

- எரிகோ(6)
- ஆயி (7:1-8:29)

**(4)ஏபால், கெர்சீம் உடன்படிக்கை புதுப்பிக்கப்படல். (8:30-35)**

- தென்பகுதிப் போராட்டம்.(9-10)
- கிபியோனியர்களின் ஏமாற்றம்.(9)
- சூரியன் தரித்து நிற்றல்.(10:1-27)
- இறுதியாக தென்பகுதி நகரங்கள் கைப்பற்றப்படல். (10:28-43)

**(5)வடபகுதி போராட்டம். (11)**

**(6)தோல்வியடைந்த கானானிய ராஜாக்கள் பெயர்விபரம் (12)**

**பிரிவுகள்.**

1. இஸ்ரவேலர்கள் குடியமர்த்தப்படல். (13-21)
2. இன்னும் கைப்பற்றபடவேண்டிய நகரங்கள்.(13:1-7)
3. யோர்தானின் கிழக்குப்பக்கம் இரண்டரைக் கோத்திரங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. (14:1-5)
4. காலேப்பின் சாட்சியும், அவனுடைய பங்கும். (14:6-15)
5. யூதாவின் நிலங்கள். (15)
6. யோசேப்பின் சந்ததிக்கான நிலங்கள்.(16-17)
7. மிகுதியான 7 கோத்திரங்களுக்கான நிலங்கள். (18-19)
8. அடைக்கலப்பட்டணங்கள். (20)
9. லேவியர்களுக்கான பட்டணங்கள்.(21)

**தீர்மானங்கள்;-**

1. யோசுவா இஸ்ரவேலர்களை விசுவாசத்திற்குள் வரும்படி அழைத்தல். (22-24)
2. யோசுவாவின் சொற்பொழிவுகள்.(22:1-24:28)
3. கிழக்குப்பகுதிக் கோத்திரங்கள்.(22)
4. இஸ்ரவேலின் தலைவர்கள்.(23)
5. முழுத் தேசத்திற்குமான செய்தி. (24:1-28)
6. யோசுவாவின் மரணம்.(24:29-33)

## இஸ்ரவேலர்கள் கானானை உரிமை கொள்ளல். (1:1-5:12)

1:1-9 .யோசுவாவுக்கு கர்த்தருடைய செய்தி

***நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியுங்கள்".*** மோசே,இஸ்ரவேலர்களின் பெரும் தலைவன். அவர் மரித்துவிட்டார், ஆனால் யோசுவா, அவரின்கீழ் 40 வருடங்கள் கற்றுக் கொண்டவர், வெளிச்சத்தைக் கையில் எடுத்துக் கொண்டு இஸ்ரவேலர்களை வழிநடத்த ஆயத்தமாகின்றார். எந்த மனிதத் தலைவர்களும் கர்த்தருக்கு அவசியமானவர்களல்ல. மோசேக்கூடாக வழங்கிய வாக்குறுதிகளைக் கர்த்தர் புதுப்பித்தார். "கானான் தேசத்தில் உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்". (1:3;உபா 11:24). நியாயப்பிரமாணத்தை தியானிப்பதனாலேயே வெற்றிகிடைக்கும் என்பதை யோசுவாவுக்கு கர்த்தர் ஞாபகப்படுத்தினார், எந்த படைத் தலைவனாலும் அது ஆகாது. அதனை நிறைவேற்றுவதற்கு பிரச்சனைகளை சந்திக்கும்போது **"பலங் கொண்டு திடமனதாயிருங்கள்**."என்று கர்த்தர் அவர்களைப் பெலப்படுத்தினார். (1:6, 7, 9, 18) கர்த்தருக்கு கீழ்ப்படிதல் வெற்றியைக் கொண்டுவரும். கானான் பரலோகத்திற்கு ஒப்பானது. சவால்களை முறியடித்து அதற்குள் நுழைவதற்கு கீழ்ப்படிதலும் விசுவாசமும் இன்றியமையாதவைகளாகும்.

### 1:10-11 மக்களுக்கான யோசுவாவின் செய்தி.

" **புறப்படுவதற்கு ஆயத்தமாகுங்கள்"** மூன்று நாட்களுக்குள் யோர்தானைக் கடந்து செல்வதற்காக ஜனங்களை அவதானிக்கும்படி தலைவர்களை யோசுவா நியமித்தார்.

1:12-18 .கிழக்கு கோத்திரங்களுக்கான யோசுவாவின் செய்தி;- "இது உங்களுடைய யுத்தம்" யோர்தான் நதிக்கு கிழக்குப்பக்கமாக குடியமர்வதற்கு மோசே, ரூபன், காத், மனாசேயின் அரைக் கோத்திரங்கள் ஆகிய கோத்திரங்களுக்கு அனுமதி வழங்கியிருந்தார். கானானியர்களைத் தோற்கடிக்கும்படி மற்றய கோத்திரத்தாருக்கு ஒத்தாசை வழங்கும்படியும் மோசே கட்டளையிட்டிருந்தார். (எண் 32:1-32). இவ்வாறு நடந்து கொள்ளல் வேண்டும் என்பதையும் யோசுவா இவர்களுக்கு ஞாபகப்படுத்தினார். மோசேக்கு கீழ்ப்படிந்தது போல யோசுவாவுக்கும் கீழ்ப்படிவதற்கு இவர்கள் ஒப்புக் கொண்டார்கள். கிழக்குப்பகுதியும்(1:13) மேற்குப் பகுதியும், கோத்திரங்கள் நீண்ட தூர பிரயாணத்திலிருந்து இளைப்பாறுவதற்கான இடமாக இவர்கள் இந்த தேசங்களை நினைத்தார்கள். இளைப்பாறுதலுக்கான வாக்குறுதி என்ற சொல்லை முதலில் உபாகாமப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. (உபா.3:20;12:10; 25:19). யோசுவாவின் கணக்குப்படி இளைப்பாறுதல்

காலம் தாமதித்தே உருவாகினது.(21:44;23:1).

**2:1-24 ராகாப்பும் வேவுகாரரும், சிகப்பு நூலும்**. இரண்டு வேவுகாரர் எரிகோவுக்கு அனுப்பப்பட்டார்கள். ராகாப் வேசியின் இடத்தில் தங்கி வேவுபார்ப்பது தகவல் சேர்ப்பதற்கான சந்தர்பம் அவர்களுக்கு கிடைத்தது. ராகாப் அவர்களை அங்கு அதிகாரிகளின் பார்வையிலிருந்து மறைத்துவைத்தாள். இஸ்ரவேலர்களுக்காக அந்த முழுநகரமே பயத்தினால் நடுங்கியது. (2:9-11;உபா 2:25; 11:25). எரிகோ, அழிக்கப்படும்போது தனக்கும் தன்குடும்பத்திற்கும் இரக்கம் காட்டும்படி ராகாப் அவர்களைக் கேட்டுக் கொண்டார். எல்லோரும் அறிந்திருந்தும் ராகாப் மட்டும் விசுவாசித்தாள். வேவுகாரர் அதனை ஏற்றுக் கொண்டார்கள். தங்கள் வீட்டை அடையாளப்படுத்தும்படி சிகப்பு நூலை யன்னலில் கட்டித்தூக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். சிகப்பு கயிறு இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் வரும் மீட்புக்கு அடையாளம்.

**3:1-13 யோர்தானைக் கடப்பதற்கான ஆயத்தம் செய்தல்**. உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கும் ஆசாரியர்களுக்கு, யோர்தானைக் கடப்பதற்கான அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டன. இஸ்ரவேலர்கள் மத்தியில் அந்த நாளில் யோசுவா உயர்த்தப்படுவார் என்று கர்த்தர் ஆணையிட்டுக் கொண்டார். (3:7-8) மோசேயோடு இருந்தது போல யோசுவாவோடும் கர்த்தர் இருப்பதை அவர்கள் காண்பார்கள். யோசுவா மக்களைப்பார்த்து பரிசுத்தம் பண்ணுங்கள் என்றார். கர்த்தர் அற்புதம் செய்ய ஆசீர்வதிக்க பரிசுத்தம் முக்கியமானது.

**3:14-17** தண்ணீர் உள்ள இடத்தால் நடந்து செல்லுங்கள். கர்த்தர் சொன்னது போல, ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரில் பட்டவுடன், யோர்தான் தண்ணீர் வற்றிப்போகத் தொடங்கியது. (3:14-17). தண்ணீர் அதிகமாக இருந்தபோதிலும், இஸ்ரவேலர்கள் வழிநடந்து முடியும்வரை இருபக்க மதில்கள்போல தண்ணீர் விலகி நின்றது, தரையிலே நடப்பதுபோலவே இஸ்ரவேலர்கள் நதியைக் கடந்து சென்றார்கள் ஏறக்குறைய 15-20 மைல் தூரம் தண்ணீர் அற்றபகுதியாக இருந்தது. (4:18).எலியா, எலிசாவின் நாட்களிலும் யோர்தான் பிளந்ததை 2இரா.2; 8, 14 வசனங்களில் காணமுடிகின்றது. இஸ்ரவேலரை எகிப்திலிருந்து செங்கடலை பிரித்து பாதுகாத்து வழிநடத்தினாரோ. அதை போன்ற அனுபவத்தை புதியதலைமுறை பிள்ளைகளுக்கும் குடுத்திருந்தார்.

**4:1-18 கற்களை அடையாளமாக நாட்டுங்கள்.**

<u>பன்னிரண்டு தெரிவுசெய்யப்பட்ட மனிதர்கள்(3:12)</u> யோர்தான் நதியிலிருந்து 12 கற்களை அதனைக்கடந்ததன் ஞாபகமாக சேர்த்துக் கொள்ளுங்கள். யோர்தானின் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்த ஆசாரியரின் கால்கள் நின்ற இடத்திலே

யோசுவா பன்னிரண்டு கற்களை நாட்டினான்; அவைகள் இந்நாள்மட்டும் அங்கே இருக்கிறது. (4:9). கர்த்தர் மோசேயோடு இருந்தது போல யோசுவாவோடும் இருக்கிறார் என்பதை இப்போது ஜனங்கள் உணரத் தொடங்கினார்கள், (4:14).யோர்தான் நதியை முழு இஸ்ரவேலர்களும் கடந்து முடித்தபின் மீண்டும் யோர்தான் நதி மீண்டும் இணைந்துள்ளது.

<u>**4:19-24** கில்கால் முகாமில் நடந்த கதைகள்.</u>

இஸ்ரவேலர்கள் கில்காலில் முகாமிட்டார்கள். யோசுவா அங்கு யோர்தான் நதியில் எடுத்த 12 கற்களினால் ஞாபகச்சின்னத்தை கட்டினான். இந்த முக்கிய நிகழ்வை தங்களுடைய பிள்ளைகளுக்குப் போதிக்கும்படி யோசுவா கூறினான். 40 வருடங்களுக்கு முன்பு செங்கடலைப் பிளந்ததையும், யோர்தானைப் பிளந்து கானானுக்குள் வந்ததையும் ஞாபகப்படுத்தும்படி கூறினார். உலகத்தின் தேசம் முழுவதும் கர்த்தரின் வல்லமையை அறிந்து கொள்ளட்டும். (4:24).

<u>**5**:*1 கானானியரின் இருதயம் கரைந்து,*</u>

இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகச் சோர்ந்து போனார்கள். இஸ்ரவேலர்கள் யோர்தானைக் கடந்து மேற்குக் கரைக்கு வந்து விட்டதைக் கண்ட கானான் தேசத்தார் யாவரும் பயம்பிடித்தவர்களாய் உறைந்து போனார்கள். இஸ்ரவேலர்களுக்கு கர்த்தர் செய்த யாவையும் எண்ணி பயம் மிகுந்தவர்களாய்க் காணப்பட்டார்கள். (2:9-11).

<u>**5:2-9** விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்.</u>

எகிப்தின் அடிமைத்தனம் ஓடி மறைந்தது. வனாந்தரத்தில் 39 வருடங்களின் போது, இஸ்ரவேலர்கள் பஸ்கா கொண்டாடுவதை மறந்து போனார்கள், தங்கள் பிள்ளைளை விருத்தசேதனம் செய்வதிலும் தவறு விட்டார்கள். இப்போது அவர்கள் உடன்படிக்கையின் அடையாளமாகிய விருத்தசேதனத்தைச் செய்யத் தொடங்கினார்கள். (ஆதி17:9-14) எகித்திலிருந்த அவமானங்கள் கில்காலில் ஓடிப்போயிற்று. (கில்கால் என்பதன் அர்த்தம் ஓடிப்போயிற்று என்று பொருள்படும்)

**5:10-12 வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் முதலாவது பஸ்காபண்டிகை.**

இப்போது காலம் சரியாக வந்துவிட்டது. இப்போது ஜனங்கள் விருத்த சேதனம் செய்வதற்கு ஆயத்தமானார்கள். இஸ்ரவேலர்கள் முதலாவது பஸ்காவை வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் கொண்டாடினார்கள். வாக்குப் பண்ணப்பட்ட தேசத்தில் அதிக உணவுகள் கிடைத்தன. பாலைவனத்தில் கிடைத்த மன்னா இப்போது நின்றுவிட்டது. (யாத்16:4-31).

## இஸ்ரவேலர்கள் கானானை வெற்றி கொள்ளல். (5:13-12:24)

**5:13-15** பட்டயத்தை வைத்திருந்த மனிதன் கூறியதாவது" உங்கள் கால் அணிகளைக் கழற்றிப் போடுங்கள்", எரிகோவிற்கு அண்மையாக, யோசுவா கர்த்தருடைய சேனைகளின் தளபதியைச் சந்தித்தார், அவர் சந்தேகமின்றி கிறஸ்துவேயாகும். அவருடைய கட்டளைகள் மோசேக்கு இட்ட கட்டளைகள் போன்றவைகளாகும்(யாத்3:1-5)

**6:1-19 மத்திய யுத்த ஆயத்தம்;-** எரிகோவை கடப்பதற்கான ஆயத்தங்கள். கானானின் வெற்றி ஆரம்பமானபோது, இஸ்ரவேலர்களின் முதலாவது யுத்த இலக்கு கில்காலுக்கு அருகிலுள்ள எரிகோவாகும். 6:2 யுத்தம் தொடங்க முன் வெற்றி அறிவிக்கப்பட்டது. இது போல் தான் இன்றும் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் சாத்தானும் அவனுடைய தூதனும் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள். நாம் விசுவாசித்தால் வெற்றி நமதே. இந்த யுத்தத்தில் யோசுவாவின் கீழ்ப்படிதல் பரிசோதிக்கப்பட்டது. அவர்கள் எரிகோவைச் சுற்றி ஏழுநாட்கள் நடக்கவேண்டும். ஏழாம் நாள் எக்காளம் ஊதும் போது, எரிகோ இடிந்து விழும் என்று கர்த்தர் கூறினார். 6:10 உங்கள் வாயிலிருந்து ஒரு பேச்சும் புறப்படவேண்டாம் என்று சென்னார். அவிசுவாசவார்த்தைகள் வரக்கூடாது என்பதற்காகவே. எரிகோவில் கிடைத்த ஆதாயம் அனைத்தும் கர்த்தருடையதாகும். (6:17-19). நகரமும் அதிலுள்ள அனைத்தும் அழிக்கப்படல் வேண்டும். ராகாபும் அவளுடைய குடும்பத்தார் மட்டுமே காப்பாற்றப்படல் வேண்டும். (2:17).

**6:20-27 அவர்கள் சத்தமிட்டார்கள் சுவர் இடிந்து விழுந்தது.**

இஸ்ரவேலர்கள் கட்டளைகளைக் கவனமாகப் பின்பற்றினார்கள், கர்த்தர் அற்புதமாக சுவரை இடித்து விழுத்தினார்(எபி11:30). அங்கு காப்பாற்றப்பட்டவர்கள் ராகாப்பும், அவளது குடும்பத்தார் மட்டுமேயாகும். யோசுவா எரிகோவை விட்டுப் புறப்படும்போது, அந்த நகரத்தைத் திரும்ப கட்டுபவர்களைச் சபித்தான். அவருடைய சாபம், ஆகாப்பினுடைய காலத்தில் நிறைவு பெற்றது.( 6:26

**7:1-15 ஆகானுடைய பாவம் ஆய்யில் தோல்வியைக் கொண்டு வந்தது.**

ஆகான், எரிகோவில் ஏற்பட்ட வெற்றியில் கிடைத்த கர்த்தருக்குரியனவற்றைத் தனக்குரியதாக்கிக் கொண்டான், ஆகான் கீழ்படியாமால் பொருட்களை இச்சித்தான். இதனால் ஆயியில் நடந்த யுத்தத்தில் தோல்வி ஏற்பட்டது. ஆகானுடைய பாவத்தினால் கர்த்தர் இஸ்ரவேலர்கள் மீது அதிகம் சினம் கொண்டவராக இருந்தார். யோசுவாவும் யுத்தம் தொடங்க முன் ஜெபித்ததாக வேதத்தில் இல்லை. தோல்விகள், இழப்புகள், தடைகள் ஏற்படும்போது கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்து விண்ணப்பம் செய்து ஆலோசனை பெற வேண்டும்.

ஆகானுடைய பாவம் ஒருவருக்கும் தெரியாமல் இருந்தது. யோசுவா, கர்த்தர் நன்றியற்றவராக செயற்படுகிறார் என்று எண்ணினார். இப்படியான தோல்விக்கு என்ன காரணம் என்பதை ஆராய யேசுவா முயற்சி செய்தார். இந்த தோல்விக்குரிய காரணத்தைக் கர்த்தர் வெளிப்படுத்தினார். (7:11) இந்த குற்றம் செய்தவரைக்கண்டுபிடித்து அவரைத் தண்டிக்கும்படி கர்த்தர் வேண்டிக்கொண்டார். (7:13-15).

**7:16-26** <u>பாவத்திற்காக, அவனைக் கல்லெறிந்து எரித்துக் கொன்று விட்டார்கள்.</u>

குலுக்குத் தேர்வுமூலம் ஆகான் குற்றவாளி என்பதை கண்டு கொண்டார்கள். அவன் தான் பாவம் செய்தேன் என்று ஏற்றுக் கொண்டான் வெற்றியின் போதுகிடைத்த ஆதாயத்தில் சிலவற்றை மறைத்துவைத்தை ஒப்புக் கொண்டார். அவனுடைய கூடாரத்தினுள் களவெடுத்த பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆகான், அவனுடைய குடும்பம், அவனுக்குச் சொந்தமான மிருகங்கள் யாவும் ஆகூர் பள்ளத்தாக்கிற்குக் கொண்டுவரப்பட்டு, கல்லெறிந்து கொலைசெய்யப்பட்டு, எரிக்கப்பட்டார்கள். அதன்பின்பு கர்த்தருடைய கோபம் தணிந்தது. 7:24-26)

**8:1-29 ஆய்யில்வெற்றிகிடைத்து.**

மீண்டும் ஆய்க்கு எதிராக புறப்பட்டபோது, கர்த்தர் வெற்றியைத் தருவேன் என்றும், கொள்ளைப் பொருட்களை எடுத்துக் கொள்ளும்படியும் கூறினார். போர் வீரருக்கு ஊதியமில்லை ஆதலால் எடுக்க சென்னார். 8:18 ஈட்டியை நீட்டும்படி கர்த்தர் யோசுவாவுக்கு கூறுகிறார். ஆயியின் குடிகள் அனைவரும் கொன்றுதீருமட்டும் கைமடக்காது மன உறுதியோடு நின்றார். புத்திசாலித்தனமான தாக்குதலைச் செய்து ஆய்யை வெற்றிகொண்டார்கள்.

**8:30-35 கெரிசீம், ஏபால்.;-** ஆசீர்வாதமும், சாபமும். மோசேயின் அறிவுறுத்தல்களை ஞாபகப்படுத்தி, (உபா. 27:2-8),யோசுவா இஸ்ரவேலர்களை கெர்சீம், ஏபால் மலைகளுக்கு அழைத்துச் சென்றான். அங்கு அவர் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி அதில் நியாயப்பிரமாணத்தின் வாரத்தைகளைப் பதித்து வைத்தான். இரண்டு மலைகளிலிமிருந்து ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் கூறுவித்தான். (உபா11:29; 27:12-13)

**9:1-27 தெற்கு யுத்த ஆயத்தம்.;-** <u>எதிரிகளால் ஏமாற்றப்படல்.</u>

எதிரிகளுக்கு எதிராக இணைந்து தாக்குதல் நடத்துவதை அம்மோனிய ராஜாக்கள் தடுத்திருந்தபோது, கிபியோனியர்கள் இடையில் முறித்து சமாதானம் பேசினார்கள். அவர்கள் தாங்கள் துரத்திலிருந்து வரும் பிரயாணிகள் போல் தங்களை இஸ்ரவேலர்களுக்குக் காண்பித்தார்கள், அதற்குச் சாட்சியாகப் பழைய உடுப்புக்களையும், பழுதடைந்த உணவுகளையும் காண்பித்தார்கள்.

இஸ்ரவேலர்களைத் தங்கள் நண்பர்களாக வரும்படியும் அழைத்தார்கள். கானானுக்கு அப்புறத்திலுள்ளவர்களுடன் இஸ்ரவேலர்கள் நட்புக் கொண்டாட அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் கானானுக்குள் வசிக்கும் கிபியோனியர்களுடன் நட்புக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. (உபா 20:10-18). யோசுவாவும், இஸ்ரவேலர்களும் கிபியோனியர்களின் செயற்பாடுகளால் ஏமாற்றப்பட்டார்கள், அவர்கள் கர்த்தரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளாமல் அவசரப்பட்டு நட்புக்கான உடன்பாட்டை ஏற்றுக் கொண்டார்கள். மூன்று நாளைக்குப்பின்பு, இஸ்ரவேலர்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து கொண்டார்கள், அவர்கள் தூரத்திலிருந்து வந்தவர்கள் அல்லவென்றும், 20 மைல் தூரத்திலிருந்து வந்தவர்கள் என்றும் அறிந்து கொண்டார்கள். அவர்களுடன் செய்து கொண்ட ஆணையின் நிமித்தம் அவர்களை அழிக்காது விட்டார்கள். இப்போதும் நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; என் தேவனுடைய ஆலயத்துக்கு விறகு வெட்டுகிறவர்களும், தண்ணீர் எடுக்கிறவர்களுமான பணிவிடைக்காரராயிருப்பீர்கள்; இந்த ஊழியம் உங்களை விட்டு நீங்கமாட்டாது என்று யோசுவா அவர்களுக்கு கூறினார். (9:22-27).

10:1-11 **நண்பர்களால் எச்சரிக்கப்பட்டு யுத்தத்தை அறிவித்தார்கள்**. கிபியோனியர்களும் இஸ்ரவேலர்களும் நண்பர்களாகிவிட்டார்கள் என்பதை அம்மோனியர்கள் அறிந்தபோது, அம்மோனியர்கள் கிபியோனியர்களை தண்டிப்பதற்கு உசாரானார்கள். ஏனைய பிரதேசங்களிலும் இவ்வாறு நட்புக் கொண்டாடமுடியும் எனவும் நம்பினார்கள். அம்மோனியர்கள், கிபியோனியர்களைப் பயமுறுத்தும் போது, கிபியோனியர்கள் யோசுவாவிடம் நட்பை ஞாபகப்படுத்தியபோது, அவர் உதவிக்கு வருவார். அம்மோனியர்களை கர்த்தர் வானத்திலிருந்து பெரிய கற்களை விழப்பண்ணி அவர்களைச் சாகடித்தார் சக்திக்கு மீறிய எதிர்ப்பு வரும்போது கர்த்தர் நமக்கு உதவிசெய்வார்.
10:12-15 **“இதைப்போல் ஒரு நாள் இனியும் முன்னும் இருந்ததில்லை”.** கடும் யுத்தத்தின் மத்தியில், யோசுவா சூரியனைப்பார்த்து, அசையாமல் நிற்கும்படி கட்டளையிட்டார், சூரியன் அவ்வாறே அசையாமல் நின்றது. வழமையான நாட்களைப் போல சூரியன் மறையவில்லை. இதைப்போல் ஒரு நாள் இருந்ததில்லை என்று யோசுவா கூறினார். இதைக்குறித்து சூரிய கிரகணம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

10:16-27 **கெட்ட ராஜாக்கள் குகைகளில் ஒளித்திருந்து பிடிக்கப்பட்டார்கள்.** அம்மோனிய ராஜாக்கள் தங்கள் படையைவிட்டுக் குகைகளில் மறைந்திருந்தார்கள். அங்கோ யோசுவாவின் வீரர்கள் அவர்களைக்கண்டு கொலை செய்தார்கள்.

10:28-43 **இறுதியாக தெற்கு நகரங்கள் அடைக்கப்படல்.** இஸ்ரவேலர்களுக்கும், கிபியோனியர்களுக்கும் எதிராக யுத்த வீரர்களை அனுப்பிய தெற்கு நகரங்களுக்கு அதிகளவு இராணுவத்தை அனுப்பி அவர்களை


கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தார். எல்லா எதிர்ப்புக்களையும் மேற்கொண்டு அவர்களை வெற்றி கொண்டார்.

**11:1-15** வடக்கு யுத்தம்;- தெற்கில் யோசுவா வெற்றி கொண்டுவிட்டார் என்ற செய்தி கேட்டபோது, வடக்கு கானானிய ராஜாக்கள் இணைந்து யோசுவாவின் இராணுவத்தைத் தடுப்பதற்கு முயற்சித்தார்கள். கர்த்தர் திரும்பவும் ஒருமுறை எதிரிகளைச் சிதறடித்தார், யோசுவா கர்த்தர் தனக்குச் சொன்னபடி அவர்களுக்குச் செய்து, அவர்கள் குதிரைகளின் குதிகால் நரம்புகளை அறுத்து, அவர்கள் இரதங்களை அக்கினியால் சுட்டெரித்தான். யோசுவா திரும்பி, ஆத்சோரைப்பிடித்து, அதின் ராஜாவைப்பட்டயத்தினால் வெட்டிப் போட்டான்; ஆத்சோர் முன்னே அந்த ராஜ்ஜங்களுக்கெல்லாம் தலைமையான பட்டணமாயிருந்தது.

**11:16-23 மூன்று யுத்தங்களின் சுருக்கம்.;-** யோசுவா, பொரும்பாலும் கானானில் எதிர்த்து வந்த சகல பட்டணங்களையும், சங்கரித்தார், காலேப்பினுடைய சுயசரிதைப் புத்தகத்திலிருந்து இதனைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. (14:6-12) வெற்றி கொள்ளுதல் 7 வருடங்களாக நீடித்தது.

**12:1-24 தோல்வியடைந்த கானானிய ராஜாக்களின் பட்டியல்.**

அதிகாரம் 12 யோர்தானின் கிழக்குப் பகுதி மோசேயினால் தோற்கடிக்கப்பட்டது பட்டியலைக் கொண்டது(12:1-6) மேற்குப்பக்கமான தேசங்கள் யோசுவாவினால் தோற்கடிக்கப்பட்டவையாகும்.. (12:7-24).




**பங்கீடு செய்தல்;- இஸ்ரவேலர்கள் கானானில் குடியமர்த்தப்படல்(13-21)**

**13:1-7 எல்லைகள் இன்னமும் பிடிக்கப்பட வேண்டியுள்ளன.**

இஸ்ரவேலர்கள் கானானைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருந்தாலும், (11:23), அங்கோ அனேக நிலங்கள் பிடிக்கப்பட வேண்டியவையாக இருந்தன. வெற்றி முற்றுப்பெறாத நிலையிலும், கர்த்தர் யோசுவாவிடம், கோத்திரங்களுக்கான நிலங்களைப் பங்கிட்டுக் கொடுக்கும்படி கூறினார். முக்கிய நோக்கத்திற்காக சில இடங்கள் வெற்றி கொள்ளப்படாமல் விடப்பட்டிருந்தன. (உபா7:22).

**13:8-33 யோர்தானின் கிழக்குப் பக்கத்திலுள்ள நிலம் 2½ கோத்திரங்களுக்குரியது. யோசுவா வயது முதிர்ந்தவரானார்.**

ஏற்கனவே யோர்தானுக்கு கிழக்கிலுள் 2½ கோத்திரங்கள் தங்கள் நிலங்களைப் பெற்றிருந்தன, இப்பொது அவற்றிற்கான எல்லைகள் குறிக்கப்படுகின்றன(13:8-13; எண்ணா 32:1-33). லேவியர்கள் தங்களுக்கு நிலங்கள் கிடைக்காது என்று ஏற்கனவே அறிந்து கொண்டார்கள். கர்த்தரும், இஸ்ரவேலர்களின் தசமபாகமுமே அவர்களின் பங்காக இருந்தன. (13:14; 21:1-42; எண்ண18:20-24). யோர்தானுக்கு குறுக்காக இரண்டரைக் கோத்திரங்களுக்கு முக்கிய பகுதிகள் கொடுக்கப்பட்டிருந்தன. (13:15-33). மக்களுக்கு போதிக்க வேண்டும் என்பதால் லேவிகோத்திரத்தார் எல்லா கோத்திரத்தின் நிலத்திலும் சிறு சிறு குழுக்களாக வசித்து வந்தனர்.

**14:1-5 யோர்தானின் மேற்குப்பகுதி நிலங்கள்.;-** “குலுக்கல் முறையில் பங்கீடு செய்தல்” யோசுவாவும், எலியேசரும் மற்றும், கோத்திரத் தலைவர்களும், மேற்குப்பகுதி நிலங்களை மோசே கூறியபடி குலுக்கல் முறையில் பங்கீடு செய்தார்கள். (எண்26:55).

**14:6-15 காலேப் 85 வயதிலும் உற்சாகமாக இருந்தார்**, அவர் யோசுவாவுடன் கூட இருந்தவர், 10 வேவுகாரர் கூறியதற்கு எதிரான அறிக்கையைச் சமர்ப்பித்தவர். (எண்14) காலேப்பிற்கு எபிரோன் நகரம் கொடுக்கப்பட்டது.

**15:1-63 யூதா கோத்திரத்திற்கான நிலம்.;-** யூதா கோத்திரத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலம் பற்றி 15:1-12, 20-63 அதிகாரங்கள் குறிப்பிடுகின்றன. பிற்பாடு எருசலேம் இஸ்ரவேலர்களுடைய மதசம்பந்தமானதும், அரசியல் சம்பந்தமான இடமாகவும் தெரிவு செய்யப்பட்டது. (2சாமு. 5:6-12; 6:1-19), எபூசியரின் ஆளுகையின்கீழ் இருந்தது. (15:63). கீரியாத்செப்பேரைச் சங்காரம் பண்ணிப்பிடிக்கிறவனுக்கு, என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம் பண்ணிக் கொடுப்பேன் என்று காலேப் சொன்னான். அப்பொழுது காலேபின் சகோதரனாகிய கேனாசின் மகன் ஒத்னியேல் அதைப்பிடித்தான்; ஆகையால் தன் குமாரத்தி அக்சாளை அவனுக்கு விவாகம் பண்ணிக்கொடுத்தான். (15:13-19).

**16:1-17:13 யோசேப்பினுடைய பிள்ளைகளுக்கான நிலம்;-** யோசேப்பின் சந்ததிக்கான நிலம் ஒரு தொகுதியாக எல்லைகள் குறிக்கப்பட்டன, பின்பு எப்பிராயீமிற்கும் மேற்குப்பக்கம் அரைவாசி மனாசே கோத்திரத்திற்கும் பங்கிடப்பட்டன. மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குப் பிறந்த கிலெயாத்தின் குமாரனாகிய எப்பேரின்மகன் செலொப்பியாத்துக்குக் குமாரத்திகள் தவிர குமாரர் இல்லை; (எண்27:1-11; 36:1-12) அவன் குமாரத்திகளின் நாமங்கள், மக்லாள், நோவாள் ,ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவைகள். அவர்கள் ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் நூனின் குமாரனாகிய யோசுவாவுக்கும் பிரபுக்களுக்கும் முன்பாகச் சேர்ந்துவந்து. எங்கள் சகோதரர் நடுவே எங்களுக்குச் சுதந்தரம் கொடுக்கும்படி கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டார் என்றார்கள்; ஆகையால் அவர்கள் தகப்பனுடைய

சகோதரரின் நடுவே, கர்த்தருடைய வாக்கின்படி, அவர்களுக்குச் சுதந்தரம் கொடுத்தான். (17:3-6). 17:7-13

17:14-18 . **"எங்களுக்கு இன்னும் நிலம் வேண்டும்"** வெற்றி கொள்ளப்படாத கானானியர்கள் இன்னும் இருப்பதால் எப்பிராமியரும், மனாசே கோத்திரத்தாரும் தங்களுக்கு நிலம் போதாது என்று வேண்டுகோள் வைத்தார்கள். அவர்களுக்கு நிலம் கொடுப்பதைவிடுத்து இரண்டுவிதமான விருப்புரிமைகளை யோசுவா கட்டளையிட்டார். ஒன்று கானானியரை கலைத்துவிட்டு அங்கு குடியேறுங்கள் அல்லது காட்டுப்பகுதியிலுள்ள மரங்களைத் துப்பரவு செய்து அங்கு குடியேறுங்கள். காலேப்பிடமிருந்த துணிவு இவர்களிடமில்லை.

18:1 **ஆசாரிப்புக் கூடாரத்தை கில்காலிலிருந்து சீலோவுக்கு கொண்டு செல்லுதல்**;-வெற்றி கொள்ளுதல் இடம்பெற்றபோதெல்லாம், இஸ்ரவேலர்களுடைய செயற்பாட்டு இடமாக கில்கால் இருந்தது, இப்போது யோசுவா இதனை விட மத்திய செயற்பாட்டு இடமாக சீலோவைத் தெரிவு செய்து, ஆசாரிப்புக் கூடாரத்தை அங்கு நிறுவினார். (18;1) நியாயாதிபதிகள் காலம் வரை சீலோதான் மத, அரசியல் மத்திய நிலையமாகச் செயற்பட்டது.


18:2-19:48 **மிகுதியான ஏழு கோத்திரங்களுக்கும் நிலப்பங்கீடு** ;- மிகுதியாக இருக்கும் நிலங்களை எஞ்சியிருக்கும் 7 கோத்திரத்தாருக்கும் பங்கீடு செய்வதற்கு மனிதர்கள் சிலர் அனுப்பப்பட்டார்கள். காணிகளைப் பங்கீடு செய்வதற்குச் சீட்டுப் போடப்பட்டது. **18:11-19**:48 பகுதி, பெஞ்சமின், சிமியோன், செபுலோன், இசக்கார், ஆசேர், தாண் என்பவர்கள் குறித்து விபரிக்கின்றது. யூதா கோத்திரத்தாருக்கு அதிக நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது, அதனால் சிமியோனுக்கு அதன் ஒரு பகுதி கொடுக்கப்பட்டுள்ளது. (19:9). தாண் கோத்திரத்தாருக்கு ஒதுக்கப்பட்ட பகுதி போதாமலிருந்ததால், அதில் அவர்கள் திருப்பி கொள்ளாமல் இருந்தபடியால் தென்பக்கமாக திரும்ப ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது. (நியா18).

19:49-51 **தலைவர்களுக்காக விஷேசித்த பங்கு ஒதுக்கப்படல்**;- *எல்லாக் கோத்திரத்தாரும் தங்களுக்குரிய சுதந்திரத்தைப் பெற்ற பின்பு,* அவர்கள் யோசுவாவைக் கனப்படுத்தும் வண்ணமாக. எப்பிராயீமின் மலைத்தேசத்தில் இருக்கிற திம்னாத்சேரா என்னும் அவன் கேட்டபட்டணத்தை அவனுக்குக் கர்த்தருடைய வாக்கின்படியே கொடுத்தார்கள்; அந்தப்பட்டணத்தை அவன்கட்டி, அதிலே குடியிருந்தான்.

20:1-9 **ஆறு அடைக்கலப்பட்டனங்கள் உருவாக்கப்பட்டன**;- யோசுவா மூன்று அடைக்கலப் பட்டணங்களை யோர்தான் மேற்குப்பக்கத்தில் நியமித்தார், அத்துடன் மோசே ஏற்கனவே கிழக்குப் பக்கத்தில் நியமித்த மூன்று அடைக்கலப் பட்டணங்களையும் ஏற்றுக் கொண்டு அங்கீகரித்தான்.(எண்.35:6-34; உபா.4:41-43)

**21:1-42 லேவியர்கள் தங்கள் நகரங்களை உரிமை கொண்டாடினார்கள்;-** லேவியர்கள் தங்களுக்கு எந்தவித நிலப்பங்கீடும் கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்டார்கள், மோசே விஷேசமான நகரங்களை தருவதாக வாக்களித்திருந்தார். (13:14;எண் 35:2-5).யோசுவா 13 நகரங்களை ஆரோனின் சந்ததியினருக்கு கொடுத்தார். (21:4, 9-19),கோகத்தியருக்கு 10 நகரங்கள் ஒதுக்கப்பட்டன. (21:5, 20-26), கெர்சோனியர்களுக்கு 13 நகரங்கள் ஒதுக்கப்பட்டன (21:6, 27-33),மொராரியர்களுக்கு 21:6, 27-33),12 நகரங்களும் ஒதுக்கப்பட்டன மொத்தமாக இவை 48 லேவியர்களுக்கான நகரங்களாகும்.

**21:43-45 "வாக்குறுதிகள் எல்லாவற்றை பாதுகாத்தார்"** எல்லா நிலங்களையும் பங்கிட்ட பின்பு யோசுவா கர்த்தர் செய்த நன்மைகளுக்கான சாட்சிகளைக் கூறினார். அவர் ஜனங்களைத் தேசத்திற்குள் அழைத்துவந்து சமாதானத்தைக் கட்டளையிட்டார். கர்த்தர் கூறிய வாக்குறுதிகள் யாவும் உண்மையாகி நிறை வேற்றப்பட்டன.



**தீர்மானங்கள்;**-யோசுவா இஸ்ரவேலர்களை விசுவாசத்தில் உறுதியாக இருக்கும்படி அழைத்தார். **(22-24)**

22;1-9. **விசுவாசத்திற்கான யோசுவாவின் அழைப்பு**- கிழக்கு கோத்திரங்களுக்கு கானான் ஆளுகை செய்யப்படும் வரை, கிழக்குக் 2½ கோத்திரத்தின் இராணுவத்தினர், மேற்குக் கோத்திரத்தாருடன் விசுவாசமாக இருந்து வாக்குறுதியைக் காத்துக் கொண்டனர்.( 4:12-13). அவர்கள் திரும்பவும் தங்கள் நிலத்திற்கும் குடும்பத்தாரிடத்திற்கும் கிழக்கு யோர்தானுக்குத் திரும்பும்போது, யோசுவா அவர்களின் திறமைகளுக்காக அவர்களை அழைத்து, வெற்றியில் கிடைத்த பொருட்களின் அவர்களுக்குரிய பங்கை கொடுத்து, நியாயப்பிரமாணங்களைக் காத்துக் கொள்ளும்படி கூறினார், ஆலோசனைகுடுத்து ஆசீர்வதித்து அனுப்பிவிட்டார்.

**22:10-34 நதி அருகில் கட்டப்பட்ட பலிபீடம் பிரச்சனையாகியது.**

யோர்தான் நதியைக்கடந்து போகும் இடத்தில் கிழக்கு படை வீரர்கள், பெரிய ஒரு பலிபீடத்தைக் கட்டினார்கள். மேற்கத்தியர்கள் இதனைக் கேள்விப்பட்டபோது, கிழக்கத்தியர்கள் கர்த்தருக்கு விரோதமாகச் செயற்படுகிறார்கள் என்று சந்தேகப்பட்டார்கள், கர்த்தருக்கு விரோதமாக ஆராதனை செய்கிறார்கள் என்று சந்தேகித்தார்கள். அவர்கள் ஒரு பரிசுத்த யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள். அவர்கள் யுத்தத்திற்குப் போவதற்கு முன்பாக நியாயப்பிரமாணத் தின்படி (உபா13:12-15), ஆசாரியனாகிய எலெயாசாருடைய குமாரனாகிய பினெகாசையும், அவனோடே கூட இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலும் ஒவ்வொரு பிதாவின் குடும்பத்துக்கு ஒவ்வொரு பிரபுவாகப் பத்துப் பிரபுக்களையும் விசாரித்து வரும்படி அனுப்பினார்கள். அவர், இஸ்ரவேலர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் புறப்பட்ட போது, கர்த்தரால் தண்டிக்கப்பட்டதையும், ஞாபகப்படுத்தினார். கிழக்கத்தியர்கள், பலிபீடம் சுருபவணக்கத்திற்காக உருவாக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தினார்கள், நாளைக்கு உங்கள் பிள்ளைகள் எங்கள் பிள்ளைகளை நோக்கி. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கும் உங்களுக்கும் என்ன? ரூபன் புத்திரர் காத் புத்திரர் ஆகிய உங்களுக்கும் எங்களுக்கும் நடுவே கர்த்தர் யோர்தானை எல்லையாக வைத்தார்; கர்த்தரிடத்தில் உங்களுக்குப் பங்கில்லை என்று சொல்லி, எங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்படாதிருக்கச் செய்வார்கள் என்கிற ஐயத்தினாலே நாங்கள் சொல்லிக் கொண்டது என்ன வென்றால்: சர்வாங்க தகனத்திற்கும் அல்ல, பலிக்கும் அல்ல, எங்கள் சர்வாங்க தகனங்களாலும் பலிகளாலும் சமாதான பலிகளாலும் நாங்கள் கர்த்தரின் சந்நிதியில் அவருடைய ஆராதனையைச் செய்யத்தக்கவர்கள் என்று எங்களுக்கும் உங்களுக்கும், நமக்குப் பின்வரும் நம்முடைய சந்ததியாருக்கும் நடுவே சாட்சி உண்டாயிருக்கும் படிக்கும், கர்த்தரிடத்தில் உங்களுக்குப் பங்கில்லை என்று உங்கள் பிள்ளைகள் நாளைக்கு எங்கள் பிள்ளைகளோடே சொல்லாதபடிக்குமே

ஒரு பீடத்தை நமக்காக உண்டு பண்ணுவோம் என்றோம். இந்த விளக்கங்கள் பினேகாசையும் அவருடன் வந்தவர்களையும் திருப்திப்படுத்தினபடியால், சுரூபவணக்கம் அங்கு மேற்கொள்ளப்படவில்லை என்பதை அறிந்து, யுத்தம் செய்யும் எண்ணத்தைக் கைவிட்டுச் சமாதானம் அடைந்தார்கள்.

**23:1-16 விசுவாசத்திற்கான யோசுவாவின் அழைப்பு–தலைவர்களுளக்கு;-**

கர்த்தர் செய்த எல்லாவற்றையும் யோசுவா தங்கள் தலைவர்களுக்குப் புரியும்படி கூறினார். சூழ இருக்கும் தேசத்தாருடன் விலகி இருக்கும்படியும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படியும் அவர்களுக்கு கூறினார். பாகால் தெய்வத்தை வணங்குபவர்களுடன் பழகுவது கண்ணியை வருஷிக்கும் என்றும் எச்சரித்தார். அவர்களின் கீழ்படிதலைக்கண்டு கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தார் என்பதையும் கூறி அவர்களை எச்சரித்தார். (23:14) கீழ்படியாதவர்களைக் கர்த்தர் தண்டிப்பார் என்றும் கூறினார். (23:15-16).

**24:1-13 விசுவாசத்திற்கான யோசுவாவின் அழைப்பு–முழுத் தேசத்திற்கும்.;-** யோசுவா தன்னுடைய இறுதி உரையை நிகழ்த்துவதற்கு, இஸ்ரவேலர்களை சீகேமிற்கு வரும்படி அழைக்கின்றார். பாகால் வணக்கச் சூழலிருந்த ஆபிரகாமை கர்த்தர் அழைத்ததை ,யோசுவா ஞாபகப்படுத்தினார், கர்த்தர் ஈசாக்கு, யாக்கோபு, ஏசா என்பவர்களுக்கு விசுவாசமும் பாதுகாப்பாகவும் இருந்தார். எகிப்திலே இருந்த இஸ்ரவேலர்களை மீட்பதற்கு மோசேயையும், ஆரோனையும் கர்த்தர் அனுப்பினார். அவர், அவர்களை செங்கடலைப் பிளந்து காப்பாற்றினார், அவர், யோர்தான் கரையில் அம்மோனியர்களுக்கு எதிராக யுத்தம் செய்தார், அத்துடன் **பிலெயாம்** சபிக்க வந்தபோது அதனை தடைசெய்து, ஆசீர்வாதமாக மாற்றினார். நீங்கள் பண்படுத்தாத தேசத்தையும், நீங்கள் கட்டாதபட்டணங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகளில் குடியிருக்கிறீர்கள். நீங்கள் நடாத திராட்சத் தோட்டங்களின் பலனையும், ஒலிவத் தோப்புக்களின் பலனையும் புசிக்கக் கொடுத்தார். (24:11-13).

**24:14-15 "நானும் என் வீட்டாருமோவென்றால்....."**எவ்வளவு தூரம் இஸ்ரவேலர்கள் கர்த்தருக்கு விசுவாசமாக இருக்கிறார்கள்? முழுதேசத்திற்கும் யோசுவாவால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றார்.

<u>**24:16-28** அவர்களுடைய மறுமொழி;-</u> " நாங்களும் அவரையே சேவிப்போம்" யோசுவாவின் தனிப்பட்ட அர்ப்பணிப்பு அவர்களுக்கு சவாலாக மாறியது. அவர்களும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து கர்த்தரையே சேவிக்க வேண்டும். யோசுவா மக்களோடு உடன்படிக்கை செய்தார், அதனை ஞாபகப்படுத்துவதற்காக ஒரு கல்லை நாட்டினார்.

**24:29-32 யோசுவாவின் மரணம்.;-** யோசுவா தன்னுடைய 110 வயதில் மரணமடைந்தார், அவருடைய ரிம்னாத்சேராவுக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டார். ஒரு பரம்பரையின் தலைவன் யோசேப்பின் எலும்புகள் கானானில் அடக்கம் பண்ணப்பட்டதுபோல உரியவிதமாக கௌரவிக்கப்பட்டார்.(ஆதி 50:25).

**24:33 எலியேசரின் மரணம்;-** எலியேசர், பிரதான ஆசாரியன், யோசுவாவின் ஆவிக்குரிய நண்பன், அவரும் மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.

**யோசுவா புத்தகத்தில் ஞாபகத்தில் வைக்ககூடியவர்கள்**

**காலேப், முக்கிய நிகழ்வு.** 10 வேவுகாரரின் அறிக்கைக்கு எதிரான அறிக்கை யோசுவாவுடன் சேர்ந்து வெளியிட்டார். (எண்14:6-9).

தகப்பன்;- எப்புன்னே (எண்13:6) பிள்ளைகள்;- ஈரு, ஏலா, நாகாம்; (1 நாள4:15)

மகள்;- அக்சாள்(15:16) தொழில்;-போர்வீரன்(14:6-14).வேதாகமக் குறிப்புக்கள்.;- 28 பிரதான குறிப்புக்கள் (14-15; 21:12; எண் 13-14; நியா 1; 1நாள. 6:56 )

**நன்றி கர்த்தாவே**

**திராணி**

**உசாத்துணை நூல்கள்.**

WILLMINGTON'S BIBLE HANDBOOK *by* Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois

# யோசுவா

Thomas Nelson Publishers. (1996). *Nelson's complete book of Bible maps & charts : Old and New Testaments.* "Completely revised and updated comfort print edition"; Includes indexes. (Rev. and updated ed.). Nashville, Tenn.: Thomas Nelson.